அதில் இருக்கின்ற குறைபாடுகளைப் போக்குவதற்கும், இதை நிறைவேற்று வதற்கும் திட்டவட்டமான முடிவுகளை மேற்கொள்வதற்கான தன்மைகளைத் தான் நாம் ஆராய வேண்டியிருக்கிறது. அதுபற்றிப் பரிசீலனை செய்து என்ன திட்டம் என்பதை அறிவித்து உங்களுடைய சீரிய யோசனைகளையும் பெற்று அதை நடைமுறைப்படுத்துகின்ற தன்மையிலே அரசு முயலும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு தலைவரவர்களே, நிதி யமைச்சர் நாவலர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அன்றைக்கு நான் பட்ஜெட்டிலே பேசும்பொழுதுகூடச் சொன்னேன். தேங் கிக்கிடந்த கைத்தறித் துணிகளை எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் முன்பு எப்படிப் பாட்டுபாடி விற்று அதனுடைய தேக்கங்களைக் குறைத்தார்கள் என்று. அதை எற்றுக்கொண்டு அந்தப் பட்டுப் புடவைகள் மீதான வரி களைக் குறைத்ததைப் போலவே குழந்தைகள் ஆண்டைக் கொண்டாடி இப்பொழுது அமர்ந்திருக்கிறோம்; ஆகவே குழந்தைகள் சாப்பிடுகின்ற பிஸ்கோத்துகள், சாக்கலேட்டுகள் ஆகியவைகளுக்கான வரியை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே 8 சதவீதம் இருக்கிறதாம், உட்காருங்கள்.

(5) அறிவிப்பு.

மானியக் கோரிக்கைகளை முன்மொழிவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1982-83 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது.

"In pursuance of Article 203 clause (3) of the Constitution of India, I, Sadiq Ali, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1982-83."

(6) வரவு-செலவுத் திட்டம், 1982-83—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 20—வேளாண்மை.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 82,98,62,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."